தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உரு	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௧ மாசி 1950—பிப்பிரவரி	மலர் ௰௧

பொழிற்றொண்டர் கருத்துரை

திருவருள் கூடியபடி, 1950 ஆவது ஆண்டு, சனவரித் திங்கள் 26 ஆம் நாள் வியாழக்கிழமை நம் இந்திய நாட்டிற் குடியாட்சி தொடங்கிறது — தொடங்கியபடியே நாளும் நாளும் நலம் பெருகத் திருவருள் கூடுவதாக.

* * * * *

எங்கும் போல நம் சங்கமும், சங்கத்தைச் சார்ந்த திருவாவடுதுறை ஆதீன அருட்டிரு அம்பலவான தேசிகர் கல்வி நிலயங்களும் குடியாட்சி தொடக்கத் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடின.

* * * * *

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினத்தில் இருபதாவது பட்டத்தில் வீற்றிருந்து அருட் செங்கோல் ஓச்சிவரும் தெய்வத்திரு அம்பலவாண தேசிக மகா சந்நிதானம் அவர்களும், தமிழ் வேந்தர் ஆறங்கங்கொண்டு

நாட்டில் முறைவழுவாது செங்கோல் செலுத்தியாண்ட பெருமையைத் தெரிவித்து நல்வழியில் நாடாளும் முறைமையை விளக்கி ஒரு நூலியற்றி இந்நிலைக் குடியாட்சித் தலைவர் மாட்சிமிக்க திரு. இராசேந்திரப் பிரசாத் அவர்கட்கு அளித்து, இந்தியக் குடியாட்சி இனிது நடைபெற ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தியின் திருவருளை நினைந்து வாழ்த்தி திருநீற்றுப்பெரும் பொருளும் வழங்கினார்கள்.

* * * * *

சென்னை மாவட்ட முன்னாள் கல்வி யமைச்சர் திருவாளர் T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் திருவள்ளுவப் பெருந்தகையார் பெருமையையும் திருக்குறட் சிறப்பினையும் உணர்ந்து வகுத்தபடி, தமிழ் நாட்டுக் கல்வி நிலையங்களும், பிற கழகங்களும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடிவருவது நமக்குப் பெரு மகிழ்ச்சி தருகின்றது.

நம் கல்வி நிலையங்களிலும் 1950, சனவரி, 5ஆம்நாள் திருவையாற்று அரசர் கல்லூரித் தலைவர் திருவாளர் P. திருஞானசம்பந்தம் பிள்ளை (எம். ஏ., எல். டி.) அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப் பெற்றது. திருவள்ளுவர் பெருமையையும், திருக்குறளின் மேன்மையையும் குறித்துத் தலைவர் அவர்கள் பேசியபின், கரந்தைக் கவியரசு திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் திருக்குறளிற் காணும் அரிய கருத்துக்களை கேட்டார் மகிழ மிக விரிவாக எடுத்து விளக்கினார்கள்.

உ

பொழி லன்பர்கட்கு வேண்டுகோள்.

✻ அடுத்த பங்குனி மலரோடு இவ்வாண்டு முடிவுறுவதால், பொழிலுறுப்பினர்கள் அடுத்த ஆண்டு வரியை முன்கூட்டி அனுப்பிப் பொழிலை ஆதரிக்க வேண்டுகிறோம்.

❂ உடன் வரியனுப்ப முடியாவிடில், விரைவில் விடையாவது தர வேண்டுகிறோம்.

❂ **வி**டையோ, பணமோ அனுப்பாதவர்கள் விலைபெறு அஞ்சலில் (V. P. P.) பெற விரும்புகிறார்களெனக் கருதி, விகுருதி ஆண்டுச் சித்திரை மலரை *10—4—50*ல் விலை பெறு அஞ்சலில் அனுப்புவோம். உளங்கொண்டு பணஞ் செலுத்திப் பெற வேண்டுகிறோம்.

❂ **வ**ழக்கமாக ஆண்டுதோறும் அனுப்பும் விலைபெறு அஞ்சலைச் (V.P.P.) சில அன்பர்கள் பணஞ் செலுத்திப் பெறாது திருப்பி விடுகிறார்கள். அதனால் வீண் செலவும் தொந்தரவும் ஏற்படுவதை வருத்தத்துடன் அத்தகைய அன்பர் நினைவிற்குக் கொண்டு வருகிறோம். சங்க நலங்கருதியும், பொழில் வளங் கருதியும் மேற்கண்ட இன்னல்கள் நேரா வண்ணம் முன்கூட்டி ஆவன செய்வார்களாக.

▲ அடுத்த ஆண்டுப் பொழிலைச் சிறந்த முறையில் வெளியிட எண்ணியிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

க. த. சங்கம்,
21—2—1950.

பொழிற்றொண்டர்.

வகை செய்.

"செங்கோ"

A. ஞானரத்தினம், சாலைத்தெரு, இராமநாதபுரம்.

(முற்றொடர்ச்சி : துணர் உடு, மலர் ம, பக்கம் 324)

என் உரை கேட்டு ஈன்ற பொழுதினும் பெரிது வந்தாள். பெருமகிழ்ச்சியால் பொலிவுற்றது வாடிய அவள் வதனம்; புது நம்பிக்கையில் உள்ளம் பூரித்தாள். என்னை வாரி அணைத்து உச்சி முகந்தாள் உவகை பொங்க. வாழ்விழந்து கிடக்கும் சோலைக்கு வழிகாட்ட வரிந்து கட்டினாள். 'வா! என் பின்னே,' என்றாள். தாய்க்கொரு சோலையுண்டு தனயனுக்கதில் பங்குண்டு, இன்பமடைய எங்களுக்கொரு இடமுண்டு, என்ற எக்களிப்பால் குருடன் ஒளி பெற்றாற் போல் குதித்தெழுந் தோடினேன் பின்னால். காடுமுரடான பாதைதான், காலைத் தூக்கி வைத்து நடந்தேன். வழுக்கல் பாதை வந்தது, பெரு விரலை யூன்றிப் பின் தொடர்ந்தேன். செங்குத்துப் பாதையிற் சிக்கெனக் கரம்பற்றி அன்னை அடிச் சுவட்டைப் பின் பற்றினேன். அதி விரைவில் அடைந்து விட்டோம் சோலையை.

செழுமைக் காட்சியிலோ, சோலை மணத்திலோ சொக்கி, தென்றலணைப்பிலே சிக்கி, விளித்த கண் மூடாது வினையற்று நின்ற நான், தாய் குரல் கேட்டுத் தன்னிலையடைந்து திரும்பினேன். தன் கை வேலை மாற்றான் களிறுமீது வீசி விட்டு மிஞ்சி வரும் வெம் கரியை வொழிக்க வேறு வேல் தேடி மயங்கும்போது தன் மார்பில் தைத்திருந்த கூர்வேல் கண்டு, பெருமகிழ்ச்சி கொண்டு, அதைப் பற்றிப் பறித்து பகைவர் மேல் பாய்ச்சப் பாய்ந்த பார்புகழ் வீரன் வரலாறு பொறித்த கல் கண்டேன். உன் முன்னோர் வீரச்செயலை விளக்க நடப்

பட்ட கல்லென விளக்கங் கொடுத்து, 'வா உள்ளே,' என்று வாயிலைக் கடத்தினாள். எருக்குக்கும கருக்குக்கும் இடையே எழிற் றருக்களிற் சில கருகியதன் காரணங் கேட்டேன். தருக்கர் செயலாற் கருகிற்று அத்தருக்களென்றாள். சில வேருடன் வீழ்ந்து கிடக்கும் விநோதமென்னவென மாதா வைக் கேட்டேன். 'வெள்ளப் பெருக்கில் வீழ்த்தினர்' என்று விடையிறுத்தாள் வேதனையுடன். ஆகாயத்தை யளாவியச் சோலையை அண்ணாந்து பார்த்துக் கொண்டு அடியெடுத்து வைத்தேன். இடறி வீழ்ந்து விடாதிருக்க இறுகக் கரம்பற்றி வழி நடத்தினாள். அண்டினேம் அச் சோலையிடையோடும் சிற்றோடையை. செந்நிறத்தோடு 'சிலு சிலு வென வோடும் தண்ணீரின் தன்மையை வினவினேன். குடிப் பிறப்புக் குடி புகாக் காலத்துக் கூடிய தலைவன் தலைவியின் தாம்பத்திய வாழ்வை விளக்க வளைந்து வளைந்து ஓடுகிறது இவ்வாறெனச் சாற்றினாள். ஆற்றைக் கடந்து அடையமுடியா உயரத்தில் அசைந்தாடி ஆணவத்துடன் நிற்கும் அம் மரத்தின் மகிமை யை மாதாவிடம் கேட்டேன். காவலன் வாழ்விலும் கவியின் வாழ்வையே காலம் விரும்புகிறது. பாராளுவோனை விட படித்தவனையே பார் எதிர்பார்க்கிறது. அரசன் உயிரினும் அறிஞன் உயிரையே அவனி ஆசிக்கிறது; இறைவனிலும் கற்றறிந்தோன் நெடுநாள் வாழ்ந்தால் நாட்டிற்கு நற் பணி யாற்ற முடியும் என்ற உண்மையை நன்கறிந்த அதிகமான் நெடுமானஞ்சி, படை வல்லாரிலும் அறிவாற்றலார் அவனி யையாள நீண்டநாள் நிலைத்திருக்கட்டுமென, தான் நெடு நாள் வாழ வருந்திப்பெற்ற நெல்லிக்கனியைத், தான் உண்ணாது ஔவைக்களித்தானே அக் கரு நெல்லிக்கனி பயந்த மரமே யது என்றாள். என்னே! காவலனின் கடமையுணர் திறன்! கற்றறிந்தோர் பாற் கொண்ட கருணை! நானிலம் வாழக்கொண்ட நல்லாசை! நாவலர் பாற் கொண்ட நம் பிக்கை! கால வெள்ளத்தின் தோல்வி! யென்று யெண்ணிக் கொண்டு அன்னையைப் பின்தொடர்ந்து போய்க்கொண் டிருந்தேன்.

திடீரென்று நின்றாள். திகைத்துப்போய், 'ஏன் நின்று விட்டாய்?' என்றேன்.

'உனக்குப் பூங்காவையும் பழத்தோப்பையும் காண்பிக்க மறந்துவிட்டேன். வா! போகலாம்' என்று ஆற்றைக் கடத்தி அக்கரைக்கு அழைத்துச் சென்றாள். பூங்காவை யடைந்தோம். வாயலில் நின்றுகொண்டு 'உள்ளே சென்று மலர் கொய்து மகிழ். பழம் பறித்துப் பசிதீர்' என்றாள். ஆசை கொண்டமட்டும் அனுபவிக்கலாமென்று ஓடினேன். ஆனால் உள்ளே புகுந்ததும் அந்தோ! என் ஆசையெல்லாம் நிராசையாயிற்று. ஏக்கங் கொண்டேன், எரிச்சலடைந்தேன், என்றுங் கண்டிராத இப் புது அனுபவத்தைக் கண்டு என்ன செய்வது என்று தெரியாது விம்மினேன்: வியர்த்தேன்: வேடிக்கையா விளையாட்டா அல்லது வினோதமா வென்று தெரியாது தடுமாறினேன்: தயங்கினேன்: மயங்கினேன். உள்ள மகிழ்வோடு உள் புகுந்த நான், எங்கெல்லாமோ இருந்து வந்த எண்ணற்ற மக்கள் கூட்டத்தைக் கண்டேன். அவர்கள் என்னிலும் உரிமையாய் இன்சுவைக் கனிகளையும் நன் மலர்களையும் கவர்ந்து செல்லும் காட்சி என்னை கதி கலங்கச் செய்தது. தாயிடம் முறையிடத் திரும்பினேன். அவளும் எதிர்ப்பட்டாள்.

'ஏன் கண் கலங்கி நிற்கிறாய்? என்றாள். 'யாரெல்லாமோ வந்து பறித்துச் செல்கிறார்களே! இதை உன் சோலையுட் பட்ட தோட்ட மென்றாயே! இதைச் செப்பனிட என்னை அழைத்தாயே!' என்று மளமளவென்று கொட்டினேன்.

'குழந்தாய்! மனம் வருந்தாதே. இக் கன்றுகளை நட்டவன் யார் தெரியுமா? இவ் வையத்தில் யாரும் யோசித் தறியாக் காலத்தில், சமதர்ம விதை யூன்றிய தீரன். பொது உணர்வு கொள்ளச் செய்த பெரியோன். தனக்கென வாழா பிறர்க்குரியாளன். பசிப் பிணி மருத்துவன்! பண்ணன்! பசித் தோர் யாவரும் பகிர்ந் துண்டு பசி தீர்க்கப் பாத்திப்

படுத்தியவன். பாலன் உள்ளங் கொண்ட உனக்குப் பழக்க மில்லாச் செயலாய்த் தோன்றலா மிது. இதுவே நம் முன்னோர்கள் காலந்தொட்டு போற்றி வளர்த்து வந்த பண்பு. ஈடு இணையில்லா இப் பண்பே நம் சோலையின் உயிர் நாடி. இப் பண்பிற்கு புது எரு விட்டு போற்றி வளர்க்கவே உன்னை இங்கு அழைத்து வந்தேன்' என்றாள்.

என் வேற்றுணர்வை வெட்டி வீழ்த்தி, தனி உணர்வை தகர்த்தெறிந்த தாயின் பாதங்களில் விழுந்து தேம்பித்தேம்பி யழுதேன். 'அழாதே அறியாமையில் நிகழ்ந்தது,' என்று கூறிப் புழுதியில் புதைந்து கிடந்த என்னைத் தூக்கி அணைத் துக் கொண்டாள். அவள் அணைப்பில் அயர்ந்த நான் 'வா' போகலாம், என்ற அவள் குரல் கேட்டுச் சுய உணர்வு அடைந்து, இதற்குள்ளாகவா? என்றேன். ஆம் அதோ பார்! மலையாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுது. கொம்பு சுற்றிக் காற்றடிக்கிற தாகையால் மழை வரும், அதற்குள் சோலைக்குள் சென்று விடுவோம் என்றாள்.

வரும் வழியில், 'நானும் நானிலத்தில் வாழ வகை செய்' என்றாள்.

'ஆகட்டும்' என்றேன்.

'புறம் புறமுதுகு பட்டுக் கிடக்கிறதே!' என்ற சத்தங் கேட்டுக் கண் விழித்தேன். புறநானூறு படிக்கப் புகுந்தவன் புத்தகத்தை நெஞ்சில் சாய்த்தபடி நித்திரையி லாழ்ந்து விட்டேன். என் நண்பர் அழகப்பர் குரல் கேட்டுக் கண் விழித்தேன். கண்டவை யாவும் கனவாயின.

திருக்குறள்

பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Phd.

(முற்றொடர்ச்சி: துணர் ௨ரு, மலர் ௰, பக்கம் 320.)

வாய்மை.

6. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ-ள்.) மனத்தொடு வாய்மை மொழியின்—தவஞ் செய்வானுவான் விருப்பத்தொடு வாய்மைச் சொற்களைச் சொல்வானுயின்; தவத்தொடு தானஞ் செய்வாரின் தலை—அவன் தவத்தொடு தானஞ் செய்வாரினுஞ் சிறப்புடையன், ஆகலான் அன்னுன் அவ்வகை வாய்மை கடைப்பிடிக்க. (எ-று)

மனம் காரணவாகு பெயர். ஒடு உருபு இரண்டுனுள் முன்னது அடைமொழிப் பொருளினும், பின்னது தலைமை குறித்து நின்ற உடனிகழ்ச்சிப் பொருளினும் வந்தன. ஐந்தனுருபு உறழ் பொருவுப் பொருட்டு. தலை பண்பாகு பெயர்.

'பொய்யாமை யென்னும் ஒருவகை வாய்மை கடைப் பிடித்துத் தவஞ் செய்வார்க்கு விளையும் பயன் கூறினீர்; இனித் தவஞ் செய்தற்கண் ஏனை வாய்மை வகைகளைக் கடைப் பிடித்தார்க்கு நிகழும் பயன்களையும் அறிய விரும்புகின்றேன்' என்ருற்கு விடை இக் குறளாற் கூறுகின்ருர்,

முன்னைப் பிறப்புக்களிற் றும் செய்த தவங் காரணமாக இருவினை யொப்பு முதலியன நிகழப்பெற்று ஞானசிரியன் வாயிலாக ஞான சாதனம் பெற்று நின்று தவஞ் செய்வாரே மனத்தொடு வாய்மைச் சொற்களைச் சொல்லுதற்குத் தகுதி வாய்ந்தவர். அன்னாரே தம் மாணாக்கரைக் கடை போக்குதற் குரிய படிமுறைகள் பலவற்றையும் அறிந்து நிற்பர். அவர் உயிர்கண் மேற் பொது வகையான் அருள் சுரந்து நின்று தவஞ் செய்தற்கண் யாவனாயினும் ஒருவன் வீடுபேறு காதலித்து அதனை யடைய வழியறியாது கலங்கி நிற்பதைக் கண்டாராயின், கண்ட வக்கணமே அவன் மாட்டுப் பரிந்து அவன் பக்குவத்திற்குத் தகச் சரியை கிரியை யோக சாதனங்களை நுதலும் பொய்ம்மைச் சொற்களை யேனும், அன்றி ஞான சாதனத்தை நுதலும் மெய்ம்மைச் சொற்களை யேனும் விருப்பத்தொடு சொல்லி வாய்மை கடைப்பிடித்து நின்றாராயின், அவர் தம் சொற்கள் பற்றித் தமக்குச் சிவ புண்ணியஞ் செய்தாராவர். அதனானே அவர் தமக்கு ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப் படுதற்கு உரிய வோர் ஏது உண்டாக்குதலோடு தம் சொற்களைக் கேட்டோனையும் முத்திநெறிக்கண் உய்த்தும் நிற்பர்.

இனித் தவத்தொடு தானஞ் செய்தலாவது புறத் துறவு பூணாது அகத் துறவை மேற் கொண்டொழுகும் இல்லறத் தின் நிற்பார் மாட்டு நிகழ்வது. அன்னார் நிட்காமிய நோக்கொடு பொருந்தி நின்று தானஞ் செய்வாராகையான் அவருடைய தானச் செயல்கள் சிவ புண்ணியமாகி அவரது தவத்தை முதிரச் செய்து ஞேயத்தைக் காட்சிப் படுத்துமாயினும் தானம் வேண்டுவோராகிய பிறருக்குப் போக நுகர்ச்சியையே உதவு மன்றி மனத்தொடு வாய்மை மொழிவாருடைய வாய்மைச் சொற்கள் போன்று பிறர் பிறவியைக் கடை போக்கும் வன்மை யுடையன வாகா வென்பது புலனாகும். இதனை யுட்கொண்டே மனத்தொடு வாய்மை மொழிதல் தவத்தொடு தானஞ் செய்தலினாங்கு சிறந்தது என்று கூறினாராயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'ஒருவன் தன் மனத் தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானுயின், அவன் தவமுந் தானமும் ஒருங்கு செய்வாரினுஞ் சிறப்புடையன்' என்னும் உரையையும் 'மனத்தொடு பொருந்துதல் மனத்திற் கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யு மவற்றி னும் அகமாகிய மனமொழிகளாற் செய்யு மது பயனுடைத் தென்பதாம்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

ஈண்டு 'மனத்தொடு வாய்மை மொழியின்' என்ப தற்கு 'மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வா னுயின்' என்று கூறுதற்கண் பொருந்த வென ஒரு சொல் வருவித்துப் பொருளுரைத்து விட்டுப் பின்னர் உரை விளக்கத்தில் 'மனத்தொடு பொருந்துதல் மனத்திற்கு ஏறுதல்' என்று கூறியவர் முன்னரே ஒடு வுருபு நான்காவ தன் உபகாரப் பொருளில் வந்ததெனக் கொண்டு 'மனத் திற் கேற வாய்மையைச் சொல்வானுயின்' என்று கூறலா மாயினும் அவ்வாறு கூருது விட்டமையானும், இனித் தவத்தைப் புறமாகிய மெய்யாற் செய்யப்படுவதொன் றென்று கருதியமையானும் 'தவத்தொடு தானஞ் செய்வா ரிற் றலை' என்பதற்கு உரை கூறுதற்கண் தவத்திற்குத் தலைமை தோன்ற உரை செய்யாமையானும், அழகியார் உரை வழீஇனு ரென்க.

இப் பாட்டு என்னுதலிற்ருே வெனின்; தவஞ் செய்பவன் பிறர்க்கும் பயன்படுமுறைமையில் தானஞ் செய்தலினுங்கு மனத்தொடு வாய்மை மொழிதல் நன்ருகு மாகலான், அன்னுன் வாய்மைச் சொற்களைச் சொல்வானுக. (எ-து.)

7. **பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை**
யெல்லா வறமுந் தரும்.

(இள்.) பொய்யாமை யன்ன புகழ் இல்லை—தவஞ் செய்பவனுக்குப் பொய்யாமையைப் போன்ற புகழ்க்

காரணம் இல்லை; எல்லா அறமும் எய்யாமை தரும்—அது பலவறங்கள் கண்ணும் நின்று வருந்தாதிருத்தலை அவனுக்குக் கொடுக்கும், ஆகையான் அன்னன் பொய்யாமை கடைப்பிடிக்க எ-று

புகழ் காரிய வாகுபெயர். எய்யாமை எதிர்மறைத் தொழிற்பெயர். எல்லா வறமும் என்றது பலவறங்கள் கண்ணும் என்னும் பொருட்டு. உம்மை முற்றும்மை. தரும் என்பது இடவழு வமைதி. அதனைச் 'செலவினும் வரவினும்' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்தானமைக்க.

மூவகை வாய்மைப் பயன்களையுங் கூறினீர். இவற்றுள் யாது ஒருவனது தவத்தை விரைவாக முடிவு போக்கி அவனுக்குப் புகழைக் கொடுக்கும்' என்று வினவினனுக்கு விடை இக்குறளாற் கூறுகின்றார்.

தவஞ் செய்வானுவான் தன் மாணுக்கரை முத்தி நெறி கூட்டுவித்தற்கு அவருடைய பக்குவா பக்குவங்களை ஆராய்து அவற்றிற் கேற்பப் புரை தீர்ந்த நன்மை பயக்கும் பொய்ம்மைச் சொற்களையாவது அன்றி வீட்டு நெறி நேரே பயக்கும் மெய்ம்மைச் சொற்களையாவது சொல்லி நின்று தவஞ் செய்வானுயின், அவ் வாராயுங் காலமெல்லாம் அவனது மனம் புறமுகப்பட்டுத் தவத்தின் கண் சிந்தை குறையும், அது குறைய அவனது மன மானது தவத்தொடு பொருந்தாத பல தீய ஒழுக்கங்கள் கண்ணும் பரிசயத்தாற் சென்று பற்றி அவன் தவத்தைக் கொல்லும், ஆயின் அவன் கள்ளாமை, வெகுளாமை, இன்னு செய்யாமை, கொல்லாமை முதலிய பல துணைச் சாதனங்களைக் கடைப்பிடித்துத் தவஞ் செய்வானுயின், இவை அவனது தவத்தை முதிரச் செய்து அவனைச் சீவன் முத்தி நிலைக்கண் உய்த்துப் புகழைக் கொடுக்கும். இங்ஙன மன்றி அவன் பொய்யாமை யென்னுஞ் சாதனம் ஒன்றனையே துணைகொண்டு நின்று தவஞ் செய்வானுயின்,

அப் பொய்யாமையானது அவன் மனத்தைப் புறமுகப் படாதவாறு செய்து அவனைத் தவத்தின் கண் நிலை நிறுத்தி சீவன் முத்தி நிலையை யடைவித்துப் புகழையீனும். எனவே, தவஞ் செய்வாணுவானுக்குப் பொய்யாமை யென்னும் வாய்மையானது பல வறங்கள் கண்ணும் நின்று வருந்திய பின்னரே சீவன் முத்தி நிலையைக் கொடுக்கும் பிற வகை வாய்மைகளைப் போலன்றி நேரே அந் நிலையைக் கொடுக்கு மாகையான், அதனைப் போன்ற புகழ்க் காரண மில்லை யென்ருராயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை யொத்த புகழ்க் காரண மில்லை; மறுமைக்கு மெய் வருந்தாமல் அவனுக்கு எல்லா வறங்களையுந் தானே கொடுக்கும்' என்னும் உரையையும் 'புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள் கூட்டல் முதலியவற்றுனும் துறவறத்திற்கு உண்ணுமை முதலியவற்றுனும் வருந்தல் வேண்டு மன்றே; அவ் வருத்தங்கள் புகுதாமல் அவ் விருவகைப் பயனையுந் தானே தரு மென்பார், எய்யாமை யெல்லா வறமுந் தரு மென்ருர்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

ஒருவனுக்குப் 'பொய்யாமை' யானது மெய் வருந்தா வகை இல்லறப் பயனைத் தரு மென்பது மெய் வருந்திய அரிச்சந்திரன் சரிதை யான் மறுக்கப் படுதல் காண்க. இனித் துறவு பூண்டு தவஞ் செய்வானுக் கன்றிக், கேவலந் துறவை மேற் கொண்டானுக்குப் பொய்யாமையானது துறவறப் பயனைக் கொடுக்கு மென்பதற்கு உரை யளவைச் சான்ருயினு மில்லை யென்க.

இப் பாட்டு என்னுதலிற்ருே வெனின்: தவஞ் செய்வாணுவானுக்குப் பொய்யாமை யென்னும் வாய்மை யானது, வேறு பல வறங்களின் சார்பாகவே சீவன் முத்தி நிலையை யீந்து புகழைக் கொடுக்கும் ஏனைய வாய்மை போலன்றி, நேரே அந் நிலையைத் தலைப் படுத்திப் புகழை

விளக்கு மாகையான், அன்னுன் பொய்யாமைமையே கடைப்பிடிக்க (எ-து)

8. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ-ள்) பொய்யாமை பொய்யாமை ஆற்றின்—தவஞ் செய்வானுவான் பொய்யாமை என்னும் அறத்தை இடைவிடாமற் செய்தானுயின்; பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று—அவன் பிற வறங்களைச் செய்யாமையே நன்று, ஆகலான் அன்னுன் பொய்யாமையையே கடைப்பிடிக்க. (எ-று)

அடுக்கிரண்டனுள் முன்னையது இடை விடாமை மேற்று, பின்னையது துணிவின் மேற்று, அறம் பிற வென்பதை பிறவற மென மாறிக் கூட்டுக.

'தவஞ் செய்வானு வானுக்கு ஏனைய வாய்மைக ளெல்லாம் பிறவறங்கள் சார்பாகவே தவத்தை முடிவு போக்கிப் புகழை யீனப், பொய்யாமை யென்னும் வாய்மையானது ஒரு சார்பும் வேண்டாது அவ்வாறு செய்யு மாகலான், அதனைப் போற் புகழ்க் காரணமில்லை யென்றீர். அஃதொக்கும், ஒருவன் பொய்யாமையொடு கள்ளாமை, கொல்லாமை முதலிய பிற வறங்களையுந் துணை கொண்டு தவஞ் செய்தானுயின், அவனுக்கு விரைவாக ஞேயங் காட்சிப் படுமன்றே' என்ருற்கு விடை கூறுவார் 'அற்றன்று. பொய்யாமை துணைகொண்டு தவஞ் செய்வானுக்குப் பிற வறங்கள் செய்தல் ஞேயங் காட்சிப் படுதலைக் காலத்தாற் ருழ்த்தி நிற்கு மாகையான், அன்னுன் அப் பிற வறங்களைச் செய்யாமையே நன்ருகும்' என இக் குறளாற் சாதிக்கின்ருர்.

ஒருவன் பொய்யாமை யென்னு மறத்தை இடைவிடாது கடைப் பிடித்து நின்று தவஞ் செய்தானுயின், அவனது மனமானது அகமுகப் பட்டுத் தவத்தின்கண் செறியும். அது செறிய அவனுக்கு ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப் படும். ஆகையான் பிற வறங்களுள் யாதும் அவனுக்குத் தேவையில்லை யாகும். அன்றிப்

கருந்திட்டைக்குடிப் பதிகமும், தண்டபாணி சுவாமிகள் வரலாறும்.

தி. செ. முருகதாசபிள்ளை,
கௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம் P. O.

"கருந்திட்டைக்குடிப் பதிகம்" என்னும் இவ்வரிய நூலை இயற்றிய ஆசிரியர், மகான் வண்ணச்சரபம், திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என வழங்கும் அருட்டிரு. தண்டபாணி சுவாமிகளாவர்.

சுவாமிகள் திருநெல்வேலியில், சைவ வேளாள மரபில் தமிழ் நாட்டின் தவப்பயனாகத் தோன்றினர். முருகனருளால் இளமையிலேயே வளமை யுற்ற செந்தமிழ்ப் பாடல்கள்

பிற வறங்களுட் சிலவற்றை அவன் செய்யப் புகுந்தானாயின், அவனது மனமானது தவத்தின்கண் அழுந்தல் மாத்திரை யின்றி விருத்திப் பட்டுத் தவக் கருத்தினின்றுந் தவறு மாகையான், அவனுக்குப் பிற வறங்கள் செய்யாமை நன்றென்று துணிந்து கூறினாராயிற்று.

இக் குறளுக்கு உரை விளக்கந் தரு மிடத்துப் பரிமேலழகர் 'பல வறங்களையும் மேற் கொண்டு செய்தற் கருமையாய் சில தவறிற் குற்றப் படுதலின், அவை யெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற் கொண்டு தவறாமற் செய்தல் நன்றென்பார். செய்யாமை செய்யாமை நன் றென்றார்' என்று கூறினர்.

ஈண்டு பொய்யாமை யானது பல வறங்களின் பயனை யுந் தானே தரவற்றாய தென்று கூறினா ரெனின், அதற்கு உரை யளவை தானுஞ் சான்றாகா தாகலான், அழகியார் உரை வழீஇனா ரென்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின் : பொய்யாமை துணைகொண்டு தவஞ் செய்வானுக்குப் பிற வறஞ் செய்தல் சாத்தியந் தலைப் படுதலைக் காலம் பற்றித் தாழ்த்தி நிற்கு மாகையான்; அன்னான் பிற வறங்களுள் யாதாயினும் வேண்டாது பொய்யாமையையே கடைப் பிடித்துத் தவஞ் செய்க. எ-து.

(தொடரும்)

இயற்றும் திறம் பெற்றனர். சந்தமாகிய வண்ணப் பாடல்கள் பாடுவதில் வல்லமையுற்றதுபற்றி வண்ணச்சரபம், திருப்புகழ்ச் சுவாமிகள் என்ற பெயர்கள் வழங்கப் பெற்றனர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களோடும் இவைகளைக் கற்பதனால் உண்டாகும் 'புலமை' இன்னது என்பதனையும் உடன் சேர்த்து 'அறுவகை இலக்கணம்' என்ற நூலை இயற்றி யுள்ளளார். வண்ணத் திலக்கணத்தைக் குறித்து 'வண்ணத்தியல்பு' என்ற நூலும் இயற்றியுள்ளார். இதற்கு முன்பு இத்தகைய நூல் எவ்வாசிரியரும் கூறினாரில்லை என்னை சுவாமிகள்.

"தொல்காப்பியனாதியர்தாமும் சொற்றாரிவர்; அச்சுட்சமியல்
வில்கால் வேலன் அருட்டுணையால் யானேவிதித்தேன்" என்றும்

"அத்தகைய வண்ணத்தி லக்கணம் யாமே அறைந்தனோம்" என்றும் கூறியுள்ளமையால் தெள்ளிதற் புலனாம் என்க.

சமயப் பற்றும், பொதுத்தெய்வ வழிபாடுடைய பற்றும் கொண்டுள்ள அன்பர்கட்குப் பயன் படும் முறையில் அறுதெய்வத்தைக் குறித்தும், சமயாதீதமான பொதுத்தெய்வத்தைக் குறித்தும் அளவிலாத் துதிநூல்களும், பொது வகையில் சமயம் பலவாயினும், இறை ஒன்றே அன்பர்தம் எண்ணப்படி நிற்கும், என்ற சமரச நிலையைக் குறித்த சாத்திர நூல்களும், புலவர் புராணம், திருவாமாத்தூர்த் தலபுராணம் போன்ற வரலாற்று நூல்களும் இயற்றியுள்ளார்.

பல உயிர்களை யாகத்துக்கும், உணவுக்கும், தெய்வத்துக்கும் என்று கூறிச்செய்யும் கொலைத்தொழில் முற்றும் அற வேண்டும் என்றுணர்ந்து திருவருளிடத்துப் பல்லாற்றானும் முயன்றவர். இதனை,

"கோவதைக்கும் பொல்லாக் குடிகேடு காண்பதன்முன்
சாவதற்ற முத்திபதம் தந்தாலும்—மேவற்கு
இசையேன்........" என்றும்

"சுத்தபூசை தோய்தரு மாயின்பேயும் தெய்வமாம் பிணப் பலியேற்கிற் தெய்வமும் பேயாம்" என்றும் சுவாமிகள் கூறியுள்ளமை அறியற்பாலது. இத்தகைய அருட்பேற்றை முருகனருளாமையால் தென்னாட்டிலுள்ள திருமலைமீதேறி உருண்டும் உடலிற் பழுதின்றி எழுந்து உலக நன்மையின் பொருட்டுத் தந்நலங் கருதாது பாடுபட்ட பண்பாடு பொருந்தியவர். இதனால் சுவாமிகளுக்குச் சீவகாருண்யமே உயர்ந்த குறிக்கோளாக இருந்தமை வெள்ளிடைமலை,

அருட்டிரு. தண்டபாணிசுவாமிகளால் இயற்யப்பட்ட கருந்திட்டைக்குடிப் பதிகம்.

வெண்பா.

சீலர் மருவுகருந் திட்டைக் குடிச்சிவனென்
பால்நற் பதிகம் பகரென்றான்—ஞாலமுய்தற்(கு)
ஆமாறு சற்றின் றருள்செய்வா னேயாகில்
ஏமாந்து நாட்கழியேன் யான்.

சுவாமிகள் பற்பல தலங்களுச்குச் சென்று ஆங்குள்ள இறைமீது பாக்கள் பலவும் திரு அரங்கநாதன் மீது "திருவரங்கத்திருவாயிரம்" என்ற நூலும், பழனித்திருவாயிரம், தில்லைத் திருவாயிரம், தெய்வத்திருவாயிரம், சூரியமாலை, மயிலாசலக் கலம்பகம், தியானுநுபூதி, தமிழலங்காரம் என்ற பல நூல்களும் பாடியுள்ளனர்.

இவ்வாறு தல வணக்கம் புரிந்து வருகையில் கருந்திட்டைக் குடிக்கும் வந்து இப் பதிகத்தை இயற்றித் தமிழுலகறியத் தந்துள்ளனர். பாடல்கள் ஒவ்வொன்றும இனிமையும், எளிமையும் உடையன.

இத்தகைய பல நூல்களையும் இயற்றிய ஆசிரியர் தண்டபாணி சுவாமிகள் இறுதிக் காலத்தில் நடு நாட்டில் உள்ள விழுப்புரத்திற் கடுத்த திருவாமாத்தூரில் தங்கி, எல்லை தாண்டா விரதம் பூண்டு, நற்றவம் புரிந்து ஞான சமாதி கொண்டுள்ளனர். அதனைச் சார்ந்த கோவிலும், கௌமார மடாலயமும், கௌமார சபையும் சிறப்புடன் மிளிர்கின்றன.

இவர்களது பாடல்கள் பலவும் பனையோலைச் சுவடிகளிலுள்ளன. அவைகள் மடாலயப் பாதுகாப்பில் உள்ளன. இம்முறையில் உள்ள நூல்கள் அச்சிட்டன சிலவும், அச்சிடாதன பலவுமாம். வெளிவராத பல நூல்களையும் வெளியிட்டுப் 'பத்திச் சுவை நனி சொட்டும்' பல பாடல்களைப் படித்துத் தமிழுலகம் இன்புறுமாறு அருள் புரிய வேண்டும் எனத் திருவருளை வணங்குவோம்.

நூல்.

உன்னடி யார்சிலர் நாவில்நின் றெனைத்துதி யோதுகென்றாய்!
பொன்னசை யாதிய [1]ஏடணை மூன்றையும் போக்கியாள்வாய்!
[2]பன்னகம் மதிபுனல் கொன்றையும் சடைக்கணி பான்மையுள்ளாய்!
[3]கன்னலம் பொழில்மலி கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே!

நாவலன் இவனெனப் பார்சொலத் திரிதரு நாயினேனை
ஆவல்முற் றியற்றுமெய்ச் சித்தன்என் றிடுந்தகைஅமைய ஆள்வாய்!
[1]தாவறுந் திருவருட் கடவமு தெனத்திகழ் சங்கரா! தண்
[2]காவளம் இயைதரு கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே!

அருணையில் நீயும்நின் தலைவியும் கிழவடி வாகித்தோன்றிப்
பொருள்நலம் பெறு[1]பொடி நல்கிய பயன்என்று பொலியச்செய்வாய்
தருணம்நன் கறிந்தொரு [2]பார்ப்பனச் சேய்க்கருள் தம்பிரானே!
கருணையங் கடலெனக் கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே![3]

பத்திநன் னெறிச்சென்றுன் பங்கயப் பூம்பதம் பரவுவேற்குச்
சித்தியும் முத்தியும் நல்கினல்லாலருட்சீர் மெயாமோ?
புத்திர சோகமுந் தீர்தர வசிட்டனைப் போற்றியாண்டாய்!
[1]கத்திகைக் கவின்பெறு கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே!

சஞ்சல வாரிதித் திரைகளின் இடைமிகத்தளரும் நாயேற்(கு)
அஞ்சல்என் றொருவிசை விடையினிற் சேவைதந் தருளொணாதோ?
செஞ்சரணத்(து) எழி லன்னமும் சங்கமுந் தேனும் வாழ்பல்
கஞ்சமென் மலர்வயற் கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே!

[1]சேவினம் பசுவினம் கன்றினம் அலறிடச் செற்றுத்தின்னும்
பாவிகள் தாமும்நல் லுணவுணச் செய்திறல் பாலித்தான்வாய்!
கோவிலெங் கணுமுதற் பூசைகொள் வான்தரக் குலவுசீர்சால்
காவிரி நீருடைக் கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே!

---

1. ஏடணை. மண். பெண். பொன்என்ற மூவாசை. 2 பன்னகம்-பாம்பு.
3. கன்னலம்பொழில்-கரும்பின்சோலை.
1. தாவறும் குற்றமற்ற. 2 காவளம் சோலைவளம்,
1. பொடி திருநீறு. 2 பார்ப்பனச்செய் மார்க்கண்டேயர்.
1. கத்திகை-துகிற்கொடி.
1. சேவினம்-எருதுகள்.

சுந்தரன் துதிக்கநாள் [1]சொன்னமும் நெல்லும்நற் றேகைமாரும்
தந்தனே ! யான்விழை தருபய னல்கிடில் தாழ்ச்சியாமோ?
அந்தரத் தமரர்தம் [2]ஆகமொ டுய்வதற்(கு) [3]ஆலம்வைத்த
[4]கந்தரத் திறையவா ! கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே !

பாரணங் கின்சுமை தீர்க்கவந் தார்களிற் பார்த்தன்வேண்டிற்
கூரண வுங்[2]கணை நல்கிய ஆடல்சொல் கூலிதந்தாள் !
நாரணன் உடன்வரும் நங்கையைப் பாதியில் நாளும்சேர்த்த
காரணனே ! எழிற் கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே !

அரிஅயன் தொழுந்தகை தோய்வதுவோ ? அடல்ஆனைச் சென்னிப்
பெரியனைக் குமரனைப் பெறுநலமோ ? பெரும்பீடு சொல்லாய் !
திரிபுரமும், கொடுந் தானவர் கூட்டமும் தேவர்தெம்புங்
[1]கரிதர நகைத்தவா கருந்திட்டைக்குடிவளர் கண்ணுதலே !

நால்வருக் கருளினே ! நல்வட லூரனே ஞாலமெச்சும்
பால்வழி தருதுதி கொண்டும் [1]கொன்றுய் ! இதோர் பாவமன்றே ?
மால்வரை போல்திகழ் முயலகன் மேனியும் வானும் வாய்ந்த
கால்வனப் புடையவா ! கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே !

அயிலைஒப் பாம்விழிப் பார்ப்பதி கேள்வனே ! அன்பர்போற்றக்
கயிலையிற் பிறங்கருட் கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலைப்
பயிலருந் [1]திருப்புகழ்ப் பாவலன் பகர்தரு பாடல்கற்போர்
[2]வெயிலவன் தனைநிகர் கீர்த்தியோ(டு) இகபரம் மேவுவரே.

முற்றிற்று.

அம்பிகை வெண்பா.

[1]செம்பியன்நா டோங்குகருந் திட்டைக் குடிச்சிவன்பால்
அம்பிகைத்தா யே !அருட்சீர் அன்னமே !—[2]கம்பிதப்பட்(டு)
எங்குளும்என் சென்னிக்(கு)இருதாள் மலர்சூட்டித்
தீங்குதவிர் சித்தரிடைச் சேர்.

---

1. சொன்னம், பொன், 2 ஆகம், உடல், 3 ஆலம், விடம், 4 கந்தரம், கழுத்து.
1. பார்த்தன், அர்ச்சுனன், 2 கணை, பாசுபதம்.
1. கரிதர-சாம்பராகும்படி.
1. கொன்றுய்-தன்னுட்கலக்கக் கொண்டாய்.
1. திருப்புகழ்ப் பாவலன்-நூலாசிரியர் பெயர் மூன்றில் ஒன்று.
2. வெயிலவன்-சூரியன்.
1. செம்பியன்-சோழன். 2. கம்பிதம்-நடுக்கம் (மனத்துயர்)

விநாயகர் வெண்பா.

சீரார் கருந்திட்டைச் செய்ய விநாயகனே !
ஆராதிப் பார்க்கருளும் ஐயனே !—போராடுந்
தானவரைச் செற்றுச் [1]சதமகன்போற் றத்திகழ்ந்தார்
ஆனவரிற் சேர்த்தெனைநீ ஆள் !

முருகன் திருப்புகழ்.

தனந்தத் தத்தனதானன—தனதானா.

[1]அலங்கற் கொத்தபல் பாடல்கள் விளம்பத் தக்கநலூகமும்
அழுந்திக் க[2]கலிவாதனை—தவிராதே !
அகங்கெட் டுப்பிழை தீர்சம ரசங்கற் றுத்தவமானதில்
அழுந்திச் சித்தியைநாடுநர்—மகிழாரோ ?
நிலங்கட் டப்படுதீவினை யனுங்கொற் றச்சமரேமிக
நினைத்துட் கித்தளர்வார்செயம்—அடையாரோ?
நெடும்பொற் புற்றவிர் தோகைகொள் [3]சிகண்டிப் பட்சியில்
[வேலுடன்
நிதங்கிட் டிக்கவுமாரர்நன்—னிலைதாராய்!
நலங்கட் குச்[4]சமனேநிகர் [5]கெடும்புற் றுப்பெரியோர்களை
நகுந்துட் டக்குலம்யாவையும்—அடும்வீரா !
நடந்தச் சத்தொடுபோயெறி கவண்கற் கைக்குறமாதெதிர்
நயஞ்செப் பித்தினைமாமிக—நுகர்வோனே !
கலங்கித் தட்டழிவாய்அயன் வருந்தக் குட்டியதோள்மிசை
கடம்புப் புட்பமொடோர்கிளி—அணிவோனே !
[6]கலிங்கத் தைச்செறுகோன்மிக வணங்கிப் பத்திசெய்வீறுறு
கருந்திட் டைக்குடிமேவிய—பெருமானே!

தெய்வமே துணை.

---

1. சதமகன்-தேவேந்திரன்.

1. அலங்கல்-மாலை, 2, கலி-மிடி, 3, சிகண்டி-மயில், 4, சமன்-எமன். 5. கெடும்பு உற்று-கெடுதல் பொருந்தி. 6. கலிங்கத்தைச்செறுகோன்-முதற்குலோத்துங்க சோழன்.

துறவும் தவவுருவும்

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

ஞாலத்து மக்கள் பரவிப் புகழும் நன்னெறி, மனதை உயர்வற உயர்ந்த வழியில் திருப்பி, அதன்பால் நிலைக்கச் செய்து, வாழ்க்கைக் குரிய கடன்மையையும் அறங்களையும் வழுவாது இயற்றுதலைப்புகட்டும். வாழ்க்கையின் இயலமைப்பு மனத்துக்கண் மாசில்லாது, பல்லுயிர்கள்பால் பழகு நெறியில் அடங்கு மாதலான், வாணாளிற் பயனளிக்கப் பயிலும் அப் பழகு நெறியின் தெளிவாகிய விழுப்பப் பொருளே வாழ்க்கையின் முடி பொருட் பிழிவாய்க் காணப்படும். அவ் விழுத் தகைமை பெறற்குத் துறவென்ற தூநெறியே உறு துணையாதல் தவப் பேறுடையார்க்குத் தெள்ளத் தெளிய விளங்கிக் கிடக்கும் உண்மையாம்.

வாழ்வியல் முறைக்குக் கருவியாகவுள்ள இவ் வுலகத்துப் புறப் பொருள்கள்பால் பற்று வைத்து உறையும் மக்கள், அவற்றினை அகத்தே தெளிந்து நுகர்ந்து, பின் உலகின் நிலையின்மை யுணர்ந்து, புறப் பொருள்களின்மே லுற்ற அவாவினை அற வொழித்து, அகத்தே துவரத் துறப்பதின் மூலம் உயிரின்பமும் உணர்வு வளனும் பெறுவர். இவ்வாறு அவா வறுத்தலான் எய்தும் இயல்பினால் உலகியற்கையும் உள்ளியற்கையும் நன்கு அறியப்பெற்றார்க்கு மருணீங்கிய மாசறு காட்சி விரிதல் ஒருதலை. காட்சி விரிந்து துவரப் பற்றறும் நிலை, சிறந்தது பழகும் செந்நெறியில் புகுத்துவதினான், இந் நெறியில் இருமைவகை அறிந்து பழகினார், தாம் நோற்றலின் ஆற்றலில் தாமே தலைப்பட்டு அருணிலைக்கண் விழுப்பேறும் செவ்வறிவும் வாய்க்கப்பெற்று, உணர்வாட்சியிலும் அருளாட்சியிலும் தெய்வப் பெற்றியாராயும் விழுத்தகை நல்லராயும் திகழ்வர். இத்தகைய விழுப்பம் வீறியோர்தாம்

நிலையற்ற உலகினை நிலையாகத் துறந்து ஞான வாழ்க்கையினை கடைப்பிடிக்கலுறுவார்.

உலக வாழ்வின் தன்மையையும் விழுத்தகை உண்மைகளையும் அனுபவத்தால் நன்குணர்ந்து, அதன் கண்ணுள்ள நிலையுளின்பத்தை மெய்த் தெளிவு கொண்டு உணர்ந்தாரே உண்மையாகத் துறக்கக் கூடும். உலக வாழ்க்கையின்கண்ணும், உலக நிகழ்ச்சியின்கண்ணும் அருவருப்பு கொண்டு தனக்கு ஏற்பட்டுள்ள பொறுப்புகளுக்குப்பயந்து, அவற்றைக் காற்றினிலேபோகவிட்டு, இல்லம் அகன்று, கானகஞ்சென்று, கடும்பனியிலும் வெய்யிலிலும் மழையிலும் யாதொரு அலுவலுமின்றித் தனியே நிற்றலும் இருத்தலும் துறவாகாது. ஏனெனின், பொறுப்பேற்றுக் கொள்ளாமை ஓரோவழி மனத்தானே நோதலின் காரணத்தால் உளதாகும். நோதல் தன்னுறுதி யின்மை நிலையினைக் காட்டும். மற்றும் இத்தகைய மனநிலை பொச் சாப்பின் பயனாலும், மடியென்னும் மாசினாலும், நாணமையாலும், நாடாமையாலும், நாரின்மையாலும், யாதொன்றும் பேணாமையானும் எழலாம். அதாஅன்று, இடுக்கண் அடுக்கிவரும் காலையில் மனச் சோர்வால் வெரிங்புடை ஓடுதலானும் அம் மனநிலை ஏற்படலாம். இவ்வகையான் எழுந்த வெறுப் புநிலை உள்ளத்தே தெளிவுங் கனிவு மின்றி, அறியாமையினாலும் மனத் தளர்வினாலும் பழுதாகித் துன்புறுத்தும் வகையினை விளைவிப்பதினான், இது இழுக்காகுமேயன்றி மெய்ப் பயனைப் பயவாது. எனவே, இத்தகைய வெறுப்புநிலை ஒழுக்கம் பயக்கும் விழுப்பத்தால் விளையும் மெய்த் துறவிற்கு நேர்முரணும்.

மெய்த் துறவாவது, கடன்மையும் பொறுப்புகளும் நிறைந்துள்ள உலகவாழ்க்கையில் செய்வினையினை ஒழிக்காது அவ் வினையால் விளையும் பயனிலுள்ள பற்றினை அற விடுத்தலே. இதனான் மனம் மெலிவும் தளர்வுமின்றி தூய்மையடைந்து திண்மைபெறும். திண்மையுற்ற மனம், தீமையினை அகற்றி, நற்றமதை நாடிப், பின் நற்றமதையும் துறந்து, நன்மை தீமைக்கு அப்பாலாய மெய்ப் பொருளோடு ஆற்ற

லுடன் ஒன்றித்து நிற்க முற்படும். இவ்வாறு மெய்ப் பொருளினை மனம் நாடியவழி, புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாய பற்றுகள் தாமாக கழலும் அளவில், உயிர்க்குற்ற துன்பம் குறையும். எனவே, உலக வாழ்க்கையில் எவ்வெப்பொருளில் ஒருவன் பற்றை விடுகிறானோ, அவ்வப் பொருளால் பற்று நீங்கினானுக்குத் துன்பமில்லை. துறவால் துன்பம் அகலுமாதலான், அளவிலின்பம் உளவாக வேண்டுவார், கால நீட்சி யில்லாது பொருட்பற்றை விரைந்து விடல் முறைமை யாகும். பொருட்பற்று ஐம்புல நுகர்வால் எழுவ தாதலால், புல்லிய புலன்களை அடுதலும், நுகர்தற்கு வேண்டிய பொருட்பற்றையும் ஒருமிக்க விடுதலும் சீரிய துறவாம். அகப்பற்றினின்று நீங்குதல் உண்மையாய துறவாதலான், அப்பற்று ஒழியுமாயின், புறத்தே உலகத்துப் பொருள்கள் இருந்தும் இல்லா தொழியினும் ஒன்றே. அகப்பற்று அறுதவழி புறவியற்கைப் பொருள்கள் இல்லாதிருந்தும் பயனின்று. எனவே, அகப்பற்றை விடத் துணிதலே மெய்த் துறவாதலான், நினைவு செயலளவாலும் முழுத் துறவு வேண்டப்படுவது இன்றியமையாத தாயிற்று.

மெய்த் துறவு பூண்டார், உள்ளத்துள்ளன்றி புறம்பேயும் உளதாகிய பற்றினை அறவிடுதலோ டமையாது, எவ்வகை யுயிர்க்கு முயிரென விருக்கும் இயல்பினராகி, தவவொளி கொண்டு நிலையாத உலகத்தில் படரும் உடம்பொடு கூடிய துன்பமாகிய நோயினையும், உளத் துன்பமாகிய அறியாமையினையும், உயிர்த் துன்பமாகிய இருள்சேர் தீ வினையினையும் அறிந் துணர்ந்து, அவற்றின் வலைப்பட்ட மக்களையும் மற்றைய உயிர்த் தொகுதியையும் கடைக்கணிப்பினால் காத்தருளலும் வேண்டும். இத்தகைய தவவொளி திகழும் துறவி நிலையினைக் கவி தாகூர் (Poet Tagore) கனி திரட்டல் (Fruit-Gathering) எனும் நூலகத்தே யுள்ள உபகுப்தர் எனும் பகுதியில் இலக்கிய நறுஞ் சுவையோடு விளங்கவைத்த அருமையின தழகைத் தெளி தமிழில் வடித்து இம்மியும் விடாது பருகுவது சாலச் சிறப்புடைத்து.

மதுரையம் பதியின் மதிற்புறத் தருகில்
புழுதியிற் றுயின்றனர் புத்த தேவர்தம்
உபகுப்த ரென்னும் உத்தம மாணவர்.
விளக்கெல்லாம் அணைந்தன. விளங்கொளிக் தவங்கள்
மூடப் பட்டன. முன்றில் தொறும் நின்றன.
கார்கா லத்தின் கருமுகிற் படலத்தால்
வானகத் துற்ற வரைவிலா மீன்கள்
மறைந்தன யாவும் மதிமயங் கினர்போல்.
பாதச் சிலம்பொலி பங்கயச் செல்வி
அம்மா ணவர்தம் அகலொளி மார்பில்
மென்கை வைக்க விழித்தனர் திகைத்தே.
குற்றம் பொறுக்கும் குப்தர்தம் விழியில்
தாங்கிய விளக்கொளி தாக்கிய துறுத்தே.
நாடகக் கணிகை நன்மணி அணியினள்.
ஒல்கிய நீனிற உடையினள் எங்கும்.
நிறைமது நீர்மை நீங்கா இளமையள்.
தனிவிளக் கொன்றை தாழப் பிடித்தே
தவமெனும் ஒளியால் கவினுறத் தோன்றும்
இளமைத் துறவியை இன்புடன் நோக்கினள்.
‘முதிரா இளமை முனியே! என்றன்
பிழைதனைப் பொறுத்துப் பேரருள் புரிதி
மனமுவந் தென்றன் மாமனை வருதி.
புழுதிநிலப் படுக்கை பழுதில்நின் யாக்கைக்கு
ஏற்ற தன்றால் இளையோய் வருக!’
‘நங்காய் நின்றன் நல்லுரை நன்றால்
கால மறிந்து என் கடமையை ஆற்ற

Upagupta, the disciple of Buddha, lay asleep on the dust by the city wall of Mathura.

Lamps were all out, doors were all shut, and stars were all hidden by the murky sky of August.

Whose feet were those tinkling with anklets, touching his breast of a sudden?

He woke up startled, and the light from a woman's lamp struck his forgiving eyes.

It was a dancing girl, starred with jewels, clouded with a pale-blue mantle, drunk with the wine of her youth.

She lowered her lamp and saw the young face, austerely beautiful.

'Forgive me, young ascetic;' said the woman, 'graciously come to my house. The dusty earth is not a fit bed for you.'

வருகுவன் யானே வழியே ஏகுக.'
அக்கண மதில் திக்கெலாம் நிறைந்த
கங்கு லென்னும் காரிருள் அணங்கு
மின்னல் என்னும் பல்லொளி காட்டிற்றே.
வானகத் தொருபால் தானளப் பிலவாம்
கடுங்காற் றுறுமி முடுகிய தவணே.
கணிகையவள் எங்கும கலங்குற நோக்கி
அச்சமிக் குடையளாய் அவதி யுற்றனளே.

*　　*　　*　　*

ஈன்றதாய்க் கிரங்கி இன்சுவை யூட்டும்
செய்நன்றி மறவாச் சீரியோன் போன்று
மருகின் இருபால் தருக்கள் பலவும்
பன்மலர்ச் சுமையான் படிமிசை தாழ்ந்தன.
சேய்மையி னின்று செயிர்தீர் வேனில்
இளங்கால் வழியே இயங்கி வந்தன்று
குழலிசை என்னும் குலவிய மிதவை.
தண்டமிழ் மாந்தர் தகவுசால் நகர்ப்புறம்
மலர்விழா வியற்ற மாம் பொழிலுற்றனர்.
வானின் நடுவே வளவிய முழுமதி
தண்கதிர் பரப்பி தகைசால் மாந்தரின்
மோன நிலையுற்ற முதுநகர் நோக்கிற்று.
மிகஇடர் விளைத்திடும் விரகநோய்ச் சார்பால்
மம்மர் பெரிதுடை மானமாங் குயில்கள்
பற்றருக் கிளையகம் பாய்துயி லகற்றிநற்
கூடலைச் சார்த்து பேருடலை விளைத்திட,
அவ்விளங் துறவியும் அந்நெறி போந்தான்.

The asectic answered 'Woman, go on your way; when thc time is ripe I will come to you.'

Suddenly the black night showed its teeth in a flash of lightning.

The storm growled from the corner of the sky, and the woman trembed in fear.

*　　*　　*　　*

The branches of the way side trees were aching with blossom.

Gay notes of the flute came floating in the warm spring air from afar.

The citizens had gone to the woods, to the festival of flowers.

From the mid-sky gazed the full moon on the shadows of the silent town.

எண்ணுப குப்தர் எழில் நகர்ஏகி
எயிற்புற மலங்க மிடந்தனி னின்ருன்.
பெருசுவர் சாயல் பேர்நிழல தனிலே
அருந்தவ முனிதன் னடிமலர் தன்னில்
நல்லுட லடைபுண் நலிவுறப் பரவி
குறைநோய் சார்ந்திட குவலய முள்ளார்
அகலாத் தீநோய் அணுகிய தென்றே
சடுதியி லகற்றிய சார்பிலா மங்கை
வீழ்ந்துறு நிலையை வியப்புறக் கண்டான்.
நங்கைப் பக்கலில் நணுகியே அமர்ந்துதன்
சீர்சால் மடியவள் சிரமதை யேற்றி
தெண்ணீ ரூட்டித் தீநோய் தணிக்கப்
பெருஞ்சால் மருந்தினைப் பேருடல் பூசஅப்
பிணியுறு மங்கையும் பெயர்நிலை யறிந்து
சார்பிலா எளியர்க் கிரங்கிடும் சால்புடைப்
பெரியீர்! நீவிர் யாரெனப் புகல
இளந்தவ முனியும் இறுதியில் நின்கண்
உற்றிடும அமைய முற்றத னுனே
உற்றுளேன் யானே! மாதென உரைத்தான்.

இக் கவிதையில் துன்பத்தைப் பொறுத்துத் தவநெறி நின்ற இளந்துறவி காரிருளில் புழுதியின்கண் துயிலுங்கால அன்னுரை விழிக்க வைத்த இளங் காரிகையை வேட்கை மயக்கத்தால் விரும்பாது பேராண்மையுடன் நின்ற துறவியின் வானுயர் தோற்றம் பெருமகிழ்வினை அளிப்பதாகும். மற்றும்,

---

The young ascetic was walking in the lonely street· while overhead the love sick *Koels* urged from the mango branches their sleepless plaint.

Upagupta passed through the city-gates, and stood at the base of the rampart.

What woman lay in the shadow of the wall at his feet struck with the black pestilence, her body spotted with sores, hurriedly driven away from the town?

The asectie sat by her side, taking her head on his knees, and moistened her lips with water and smeared her body with balm.

'Who are you, merciful one?' asked the woman.

'The time, at last, has come to visit you, and I am here,' replied the young ascetic.

(Fruit-Gathering:—*by Rabindranath Tagore.*)

தவநெறியினைக் கெடுக்க முயன்றுள் அகன்றுபோக, அச்சத்தைத் தரத்தக்க கங்குலிடைப்பட்ட கடுங்காற்றின் முழக்கமும் ஆரவாரமும் புறத்தே காணச் செய்து, துறவியினது அக அமைதியினை தாகூர் விளக்க வைத்தது உள்ளுணர்வை எழுப்பி இன்புறுத்தும் பான்மைத்து. நெஞ்சிற் றுறந்தார், இன்ப துன்பங்கள் உயிர்க்குணமாதலை உள்ளத்தான் உணர்ந்து, துன்பத்திற் கிடமாயுள்ள உலகத்து இளவேனிலின் படும் குழலோசை இன்பமும், குயிலிசை இன்பமும், மற்றைய சூழ் நிலையா லேற்படும் இன்பமும் அற்கா வியல்பிற்றென அறிந்து, உயிர் துயருற்று அலமறும் அமயத்து இறைபோன்று முன் வந்து மூவகைத் துன்பம் துடைத்து அருளுவது அன்னார்க்குத் தலைமை இயல்பாயிற் றென்பதை கவி தாகூர் உணர்த்தும் வகை கழிபேரு வகையையும் வியப்பையும் பயப்ப தாகும். இதனான் தவவழி நிற்பதெல்லாம், அடல்சேர் ஐம்புலனை அடக்கி உள்ளம் உரம்பெற்று தொடர்பு பற்றுது எவ்வுயிர்க்கும் அருள்புரிந்து காத்து அந் நெறியான் மெய்யுணர்ந்து உயர்ந்து வீடு பெறற் பொருட்டென்பதூஉம், தவவொளி திகழும் பேரருளுடைய துறவியர் விண்ணகத் தேவரினும் மிக்கா ரென்பதூஉம் பெறப்பட்டதறிக.

மெய்த் துறவை நாடுபவர் அறிவின் பயனல் அகப் பற்றையும் புறப் பற்றையும் விடுவரே யன்றி அறியாமையாகிய வெறியின் பயனுலின்று. இன்மை இழிவையும், உடைமை உயர்வையும் தரும் இவ்வுலகின் கண்ணே, அறிவின் பயனல் தீரத் துறக்கத் தலைப் பட்டார்க்கு இன்மை நன்மையாகவும், உடைமை மயலாக்கும் மடைமையாகவும் தோன்றும். தோன்றவே, உற்ற உரு உடம்பிலும் அரு உடம்பிலும் அன்னர் பற்றுவைத் தொழுகார். உடம்பையும் மிகைஎன்று அறிந்து யானெனதென்ற இருவகைப் பற்றுக்களையும் விட்டார் இன்ப வீடுபெறற்குரியர். எனவே, பற்றினை விடாத வரை இடும்பைகள் விடாதென்பது அறியலாயிற்று.

> பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெருகிய வின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்ன
> தற்றோ ருறுவ தறிக.

என்பது மணிமேகலை. இதனான் பற்றின் காரியம் பிறப்பென்றும், பிறப்பிற்குரிய காரணம் பற்றென்றும் தெளியப்படுவ

தினுன் 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என வள்ளுவர் கூறியது நன்கு சிந்தித் துணரற்பாலது. பற்றுண்மையே பிறவிக்குக் காரணமாயவழி, பற்றற நீங்கின், பிறவியும்நீங்கும். அப்பற்று அறுக்க லுற்ருர், பற்றுக் கோடாகப் பற்றவேண்டியது பற்றற்ருன் பற்றினையே என திருவள்ளுவர்

'பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்ற குறட்பா மூலம் உளவு வகையான் உவந்து கூறியது அறிதற்பாலது. மற்றும் இதனில், பற்றறுதலும், பற்றுதலும், பற்றுதலோடு பற்றறுதலும் என்ற பொருண் மூன்றினை தியல் புண்மையினை வள்ளுவர் வழங்கி உய்யும் வழி கூறிக் கட்டளை யிடுவது ஒரு நல்லறிவு நூஉவா மென்க. இங்ஙனம் கிளக்கப் பட்ட மூவகை யியல்பின் உட்கோளின்கண், கழி பேரன்புடன் நிகழும் நினைவின் வழித்தாய ஒன்ருற்றுப் படுத்தலை, மணக் குடவர், 'தியான சமாதி' எனக் கொண்டு, 'பற்றற்ருன் பற்ருவது தியான சமாதி' எனப் பகர்ந்தது கருத்தாய்ப் பகுத் தறிந்து கடைப் பிடிக்கற் பாலது. மற்றும், 'பற்றறுத் தானது பற்றினைப் பற்றுக: அதனைப் பற்றுங்கால், பயன் கருதிப் பற்ருது பற்று விடுதற்காகப் பற்றுக.' என மணக் குடவர் மன மலர்ந்தருளும் உரையின் பொருட் பொலிவு உற்றுணரற் பாற்று. அறிவுடைமைக்குப் பயன் இறைவ னடியைப் பற்று தலென்றும், அவனது திருவடியாகிய புணையை அடைந்தவர் பிறவி யடையாரென உறுதி தோன்றப் பொது வகையான் 'கடவுள் வாழ்த்தில்' அறுதி யிட்டுணர்த்திய வள்ளுவப் பெரியார் இக் குறள்பால் 'அப் பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு' எனப் பேரா இயற்கை தரும் ஆராமையினை வியந்து அருமைப் பாடு தோன்ற விதந்தருளித் துறக்குமாறும் கூறியது, துறவறநிலை விழைவார் நுண்ணிதிற் றெளிந்து கொள்ளற்பாலது. இதனுன் துறவோர் தமதாற்றல் முழுமையுப் பரம்பொருளினது திருவருளையே பற்றி மனதை அதனில் நீடு நிலைக்கச் செய்தல் வேண்டு மென்பதூஉம், துறவு நிலைக் குரிய கடன்மைகளையும் அறங்களையும் வழுவாது சீருறச் செய்யும் மனவலிமையையும், அயரா உழைப்பினையு முடையார்க்கு மெய்த் துறவின் முற்றிய நிலை தாமாக வந் தடையு மென்பதூஉம் உணரப் பெற்ருும்.

(தொடரும்.)

இசைத் தமிழ்

திரு. சங்கீதம் ப. சுந்தரேசன்,
தேவார இசை யாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி துணர் உடு—மலர் 4, பக்கம் 110)

அலகு முறைகள்

சி :—ஐயா. தாங்கள் கூறியபடி எனது கையிலிருக்கும் கருவி நீங்கலாக மற்ற மூன்று கருவிகளையும் கொண்டு வந்துள்ளேன். இதோ. இருக்கின்றன.

ஆ :—சிறுவனே. நமது முன்னோர்கள் முதன் முதலாக ஒவ்வொரு நரம்பிற்கும் ஐந்தாம். ஐந்தாம் நரம்பாக இசைத்தே இசையோசை நுட்பங்களை ஆராய்ந்துள்ளனர். அஃதே போன்று நாமும் ஆராய வேண்டுமாதலான், நீயும் உனது கையிலிருக்கும் கருவியில் நரம்புகளை நின்ற நரம்பிற்கு ஐந்து ஐந்து நரம்பாக தெறித்துக் காட்டி அதனோசை நுட்பங்களை தெளிவு படக் கூறுவாயாக.

சி :—ஐயா, அப்படியே. இதோ. இவ் வோசை முதல் நரம்பாகிய தார நரம்பி னோசை, இதற் கைந்தாம் நரம்பாகிய உழை நரம்பையும், இதனோடு சேர்த்து இசைக்கின்றேன். இவ் விரண்டு நரம்பி னோசையும் சேர்ந்து ஒரு வகை இனிமை பயக்கின்றது.

ஆ :—சிறுவ. நீ. தெறித்த இரண்டு நரம்பி னோசையும் எவ்வாறு அமைவுற்று இனிமை பயக்கின்றனவோ, அது போன்றே எந்த நரம்பை, முதல் நரம்பாகக் கொள்ளினும், அதனதற்கு ஐந்தாம் நரம்பை சேர்த்திசைக்குங்கால், முன்னைய ஓசை போன்றே இனிமை பயக்கத்தக்கதாக

அமைவுற வேண்டும். அவ்வாறு ஏதேனும் ஓர் நரம்பு அமைவுறுவிடில் அமைவுறும் முறையில் நரம்புகள் கட்டியறியவேண்டும். இங்கு, உனது கருவியில் எல்லா நரம்புகளையும் முற் கூறிய முறையில் இசைத்து ஓசை நுட்பங்களை நன்கு அமைதியாக அறிந்து கூறுவாயாக,

சி:—ஐயா. அப்படியே கூறி வருகின்றேன். (நரம்புகளைத் தெறித்து) தாரமும் உழையும் ஒத்திசைக்கின்றன. இதுவே முதன் முதலாக ஒத்திசைப்பது, பின்னர் உழையும் குரலும் ஒத்திசைக்கின்றன, குரலும் இளியும் ஒத்திசைக்கின்றன. இளியும் துத்தமும் ஒத்திசைக்கின்றன. துத்தமும் விளரியும் ஒத்திசைக்கின்றன. விளரியும் கைக்கிளையும் ஒத்திசைக்கின்றன. கைக்கிளையும் தாரத்தினந்தர நரம்பும் ஒத்திசைக்கின்றன. இங்கு எண் முறையில் கைக்கிளைக் கைந்தர மிசை தாரமாக இருந்தபோதிலும் ஓசை முறையில் கைக்கிளையோடு ஒத்திசைக்கும் ஓசை. தார இசைக்குக் கூடியும் குரலிசைக்கு ஓரலகு குறைந்தும் ஒலிக்கின்றது. இதுவே அந்தர வகையில் முதலந்தரமாகும்.

ஆ:—சிறுவ. அந்தர வகைகளையும் ஆராய்வாயாக.

சி:—ஐயா. முதலந்தரமாகிய தாரத்தின் அந்தரத்தோடு உழையினந்தரம் ஒத்திசைக்கின்றது. குரலினந்தரமும் இளியினந்தரமும் ஒத்திசைக்கின்றது. இளியினந்தரமும் துத்தத்தினந்தரமும் ஒத்திசைக்கின்றது; ஐயா, ஆனல். துத்தத்தினந்தரத்தோடு ஒத்திசைக்கின்ற நரம்பு இக் கருவியில் இல்லை.

ஆ:—சிறுவ. 'மகிழ்ந்தோம்' இரண்டாவதாக, புதியதொரு கருவியில் உனது கையிலிருக்கும் முதற் கருவியின் துத்தத்தினந்தரத்தோடு ஒத்து இசைக்கின்ற நீர்மையவாக முதல் நரம்பைக் கட்டுவாயாக. பின்னர் அக் கருவியில் முறையே முதல் நரம்பிற்கொப்ப இருபது நரம்புகளையும் அதற்கேற்ப அந்தர நரம்புகளையும் கட்டுவாயாக.

சி :—ஐயா. தாங்கள் கூறியபடியே இரண்டாங் கருவியில் யாவும் கட்டி முடித்தேன். அதனுேசைகளையும் ஒப்பு நோக்கி அறிந்துவிட்டேன்,

ஆ :—சிறுவ. அந்தக் கருவியை வேருெரு மாணவனிடம் தந்து இசைத்துக் காணவேண்டும்.

சி :—ஐயா. அப்படியே.

(இரண்டாம் சிறுபாணன் இரண்டாங் கருவியை இசைத்துக் கூறுகின்ருன்)

(ஆசிரியர் முதற் சிறுவனை வினவியது போன்று இரண்டா மவனையும் வினவுகின்ருர்)

இ. சி :—ஐயா. இந்தக் கருவியி லமைந்த நரம்புகள் யாவையும் தெறித்தறிந்தேன். அந்தரங்களையும் நன்கு தெறித்தறிந்தேன். முதற் கருவி போன்றே இசைகளும் அந்தரங்களும் ஒத்து இசைக்கின்றன. இக் கருவியி லும் துத்தத்தினந்தரத்தோடு ஒத்திசைக்கும் நரம்பு இல்லை.

ஆ :—ஆம், இங்ஙு நீயும் உனது கருவி (இரண்டாங் கருவி) யின் துத்தத்தினந்தரத்தோடு சேர்ந்திசைக்கும் ஒரு நரம்பை வேருெரு கருவியில் முதல் நரம்பாகக்கட்டி முறையே ஏனைய நரம்புகளையும் அந்தர நரம்புகளையும் கட்டி இசை யொப்புமையோர்ந்து வேறு மாணவனிடம் கொடுப்பாயாக.

இ. சி :—ஐயா. அப்படியே கொடுத்தேன்.

(மூன்ருமவனையும் ஆசிரியர் முறையே வினவு கின்ருர்)

மூ. சி :—ஐயா. எனது கருவியிலும் நரம்புகள் யாவும் ஒத்திசைக்கின்றன. அந்தரங்கள் யாவும் இசைக்கின்றன. முன்னைய கருவிகள் போன்றே துத்த அந்தரத்தோ டிசைக் கும் நரம்பு இல்லை.

ஆ :—சிறுவர்களே. பின்னும் நரம்புகள் கட்டாத கருவி உளதோ?

சி:—ஐயா. பின்னும் ஒரு கருவி எஞ்சியுள்ளது. இதுவே நான்காம் கருவியாகும்.

ஆ:—ஆம், அக் கருவியிலும் நரம்புகள் கட்டவேண்டியதே. மூன்றாங் கருவியின் துத்த நரம்பி னக்தரகரம் போடு இசைக்கின்ற முறையில் முதல் நரம்பைக் கட்டி அதனையும் பின்னுமோர் மாணவனிடம் கொடுப்பீராக.

சி:—ஐயா. அப்படியே கொடுத்தோம்.
(ஆசிரியர் நான்காமவனையும் வினவுகின்றார்.)

ஆ:—சிறுவ, உனது கருவி எவ்வாறுளது.

நா. சி: ஐயா எனது கருவியிலும் நரம்புகள் யாவும் ஒத்த முறையில் அமைந்து. ஐந்தாம் நரம்பு முறையில் ஒத்திசைக்கின்றது. அந்தரங்கள் யாவும் இசை ஒற்றுமையாகவே உள. முன்னைய கருவிகள் போன்றே துத்த அந்தரத்தின் ஐந்தாமிசைக்கு ஒத்த நரம்பு இக்கருவியிலும் இல்லை.

ஆ:—மாணவச் சிறுவர்களே. மிகவும் மகிழ்ந்தோம். இனியே நாம் அலகு முறைகளை யாராய முற்படுவோம். நீங்கள் நால்வரும் நிரலாக அமருங்கள். நாம் கூறுகின்றபடி ஒவ்வொருவரும் அடுத்தடுத்து, தங்கள் தங்கள் கருவியில் முறையே முதல் நரம்பைத் தெறிக்கவேண்டும். ஒவ்வொரு கருவிக்கும் முதல் நரம்பினோசை எவ்வாறு அமைந்துளதென்பதை நன்கு அறிந்து கூறவேண்டும். இனி முறையே இசைத்துக் கூறுவீர்களாக.

(ஆசான் கூறியபடி மாணவர்கள் ஒவ்வொருவராக முதல்நரம்பை இசைக்கின்றனர்)

சி:—ஐயா. முதற்கருவியின் முதல்நரம்பினோசைக்கு இரண்டாங்கருவியின் முதல்நரம்பினோசை கூடுதலாக ஒலிக்கின்றது.

ஆ:—ஆம். அவ்வாறு கூடுதலாக ஒலிக்கின்ற இசைக்கேற்ப முதற்கருவியில் ஏதேனும் இசையிடங்கள் உளவோ? அதன் அமைப்பை விளங்கக்கூறுக.

சி:—இரண்டாங் கருவியின் முதல்நரம்பிசைக் கொப்ப முதற்கருவியில் இசையிடம் இல்லை.

ஆ:—ஏன்? பின்னர் எவ்வாறு ஒலிக்கின்றது?

சி:—ஐயா. முதற்கருவியில் இரண்டாமிசையிடம் தாரத்தினந்தரமாகும் இதன் ஒலியைவிட, ஓரலகு குறைந்து இரண்டாங்கருவியின் முதல்நரம்பிசை ஒலிக்கின்றது.

ஆ:—ஆம். அந்த ஒலியின் நுட்பத்தையே நாம் அறியவேண்டும் நிற்க. இரண்டாங்கருவியின் முதலிசையினது ஒலியளவின் பெறுமானத்தைக் கூறக் கூடுமா? கூறுவாயாக.

சி:—ஐயா. எங்கள் மீது இரக்கங்கொண்டு தாங்கள் தான் விளக்கவேண்டும்.

ஆ:—சிறுவர்காள்! நாம் கூறிவருவதை நன்கு செவிமடுத்து அறிவீர்களாக. நாம் முதன் முதலாக முதற் கருவியை ஆராய்ந்தகாலை, அதாவது ஏழிசைகளையும் அதனந் தரங்களையும் ஆராய்ந்தவிடத்து, நமது முதற் சிறுவர் ஏழு இடங்கள் ஒரு நொடி யளவிலமைந்து உளதெனக் கூறினர். அவ்விசை யிடங்களை மீண்டு மொருமுறை உங்களுக்கு நினை வூட்டுகின்றேன். நிரலாகக் கூறுகின்றேன்.

இட எண்கள்	தொடக்கம்	இடை வெளியளவு	முடிவு
க	தார அந்தரம்	ஒரு நொடி	குரல்
உ	குரலந்தரம்	,,	துத்தம்
௩	துத்தஅந்தரம்	,,	கைக்கிளை
௪	கைக்கிளை	,,	உழை
௫	உழையந்தரம்	,,	இளி
௬	இளியந்தரம்	,,	விளரி
எ	விளரி	,,	தாரம்

மேலும் நாம் ஒரு நொடியளவினும் பார்க்க மிக்கிசைக்கும் இடம் ஏதேனும் உளவோ என வினவ நமது முதற்சிறுவர்

மறுமொழி தந்தார். ஒரு கொடி யளவினும் மிக்கிசைக்கு மிடம் தாரத்திற்கும் அதனந்தாரத்திற்கும் நின்ற இடை வெளியும் உழைக்கும் அதனந்தாரத்திற்கும் நின்ற இடை வெளியுமாமென நினைவிருக்கின்றதா?

சி:—ஐயா, ஆம், ஆம்,!

ஆ:—அவ்வாறு கூறப்பட்ட தாரத்திற்கும் அதனந்த ரத்திற்கும் இடைநின்ற ஒலியளவின் ஓரிடத்தையே நாம் இரண்டாங் கருவியின் முதல்நரம்பினோசையால் அறியலா னோம். இனி, அதன் பெருமானத்தைச் சற்று விளக்கு கின்றோம். நன்கு உற்றுக் கேட்பீர்களாக.

முதற் கருவியில் குரல் நரம்பினொலிக்குத் தாரத்தினைந் தாம்நரம்பினொலி ஒரு கொடியளவு குறைவென அறிந்தாம். கொடியளவினை அலகு எனப் பண்டையோர் கூறினர். இனி நாமும் அலகு எனவே கூறுவாம். தாரத்தினந்தா நரம்பி னொலிக்கு நமது இரண்டாங் கருவியின் முதல்நரம்பினொலி ஓரலகு குறைவென அறிந்தாம். ஆதலான் இங்கு நாம் அறியக் கிடப்பது இரண்டாங் கருவியின் முதல் நரம்பி னொலிக்கு முதற் கருவியின் குரல் நரம்பொலி இரண்டலகு கூடுதல் என்பதே; இதுவே நமது முன்னோரால் அறியப் பட்ட நரம்பினொலி நுட்பமாகும். நாம் இதுகாறும் நான்கு கருவிகளில் நரம்புகள் கட்டித் தெறித் தறிந்தோ மல்லவா? அவை யாவும் இம்முறையே இரண்டு இரண்டு அலகின் வேறு பாட்டையே கொண்டுள. இனியேனும் நீங்கள் யாவரும் முற்றிலும் அறிவீர்களா?

சி:—ஐயா. ஒருவாறு அறிந்தோம். நான்கு கருவி களிலும்-இரண்டலகின் வேறு பாட்டினை முறையே ஒரு முறை கூறிவிட்டால், பின்னர்க் கருவியிற் கேட்கலாகும்.

(தொடரும்.)

பொருந்துமா? (௬)

வித்துவான் M. குஞ்சிதபாத தேசிகர், தமிழாசிரியர்,
உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

தமிழ்மொழியின்கண் உள்ள செய்யுட்கள் எல்லாம், பா, பாவினம் என்ற இரண்டுவகையிலடங்கும். இவ்விரண்டினுள் பா ஐந்து வகைப்படும் என்பர். அவற்றுள்ளும் முதன்மை வாய்ந்தது வெண்பாவேயாம். இதனால் முதற்பா என்ற பெயரையும் எய்தும். இத்துணைச் சிறப்புடைய பாவைப் பாடுவதில் தலை சிறந்தவர் புகழேந்திப் புலவர் ஆவர். இவர் "வெண்பாவிற் புகழேந்தி" என்று பலபட்டடைச் சொக்க நாதப்புலவர் பெருமானுர் புகழப்பெற்ற சீர்மையுடையவர். செஞ்சொற்களாலே அழகுபட பொருட் செறிவுடன் போற்றி யுரைத்திடுதலை, நளவெண்பா என்ற நல்லமிழ்தினைப் பருகி யவர் உணராது மயங்குவரோ!

நளவெண்பா என்னும் இவ்வுயரிய அணிகலனில் உள்ள பல பாக்களாகிய மணிகள் அணியிலக்கணத்திற்கே ஒரு ஒளியை யுண்டாக்கிவிட்டது என்றால் அது மிகையாது.

அவையடக்கச் செய்யுள்.

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினாற் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையிற்
றேன்பாடுந் தார் நளன்றன் றெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது.

(இ-ள்) பைந்தொடையில்—பசுமையாகிய மலர்களில், தேன் பாடும்—வண்டுகள் இசைபாடுகின்ற, தார் நளன் தன்—மாலையையணிந்த நளமகாராசனது, தெய்வத் திருக்கதையை —தெய்வத்தன்மை பொருந்திய அழகிய சரித்திரத்தை, யான் பாடல் உற்ற இது—(அறியாதவனாகிய) யான் பாடத்தொடங் கியதாகிய இச்செய்கை, வெம்தறுகண்—கொடிய அஞ்சாமைத் தன்மையுடைய, வேழத்தை—யானையை, வேரிக்கமலத்தின் தந்துவினால்—வாசனை பொருந்திய தாமரை (த்தண்டின்) நூலி னால், கட்ட—பிணிப்பதற்கு, சமைவது ஒக்கும்—முயல்வதை ஒத்திருக்கும் (எ-று.)

இங்கு மேற்குறித்த பொருளில், பைந்தொடையில்— பசுமையாகிய மலர்களில், தேன்பாடும்—வண்டுகள் இசை பாடுகின்ற, தார் நளன்றன்—மாலையையணிந்த நள அரசனது. என மாலையை குறிக்கும் தொடை என்ற சொல் இருக்க, மறுபடியும் தார் என்ற சொல்வர நம் புகழேந்திப் புலவர் பாடுவரோ என்பதே ஐயப்படத்தக்கதாக வுள்ளது.

இனிப் பழைய இலக்கியங்களை ஆராயின் தொடை-(யாழ்) நரம்பு. என்ற பொருளிலேயே பெரும் புலவர்கள் எடுத்தாண்டுள்ளார்களென்பது கீழ்வரும் மேற்கோள்களால் உணரலாம்.

(1) ‘தேனெர் தீம் தொடைச் சீறியாழ்’—தேன் போல இனிய நரம்புத்தொடை பொருந்திய சிறிய யாழ். (புறநானூறு-70)

(2) ‘தீம் தேன், அணிபெற வொழுகியன்ன அமிழ்துறழ் நரம்பின்நல்யாழ்’ (சீவக-சிந்தாமணி 722)

(3) ‘பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்த் தீந்தொடை’ (மணிமேகலை)

(மேற்படி குறிப்புரை) தீந்தொடை—இனிய நரம்பு

(4) ‘யாழிசை கொண்ட இன வண்டிமிர்ந் தார்ப்ப’ (கலித்தொகை 131-9 வரி)

(5) ‘அரவ வண்டினம் யாழெனு ஆர்ப்ப’ (பெருங்கதை)

இவற்றைக் காணின் தொடை என்ற சொல்லுக்கு யாழ் நரம்பு என்ற பொருள் கொள்ளலாம் என்பதும், யாழிசை போல் வண்டுகள் ஒலித்தல் என்ற பொருள் சங்க இலக்கிய ஆட்சியே என்பதும், இவற்றை நுண்ணிதின் ஆராய்ந் தமைத்த புகழேந்திப் புலவரின் கருத்தென்பதுங் கொண்டு

பைந் தொடையில்—செவ்வியையுடைய (யாழ்) நரம்பைப் போல தேன்—வண்டுகள், பாடும்— (இசை) பாடும், தார்—பூமாலையை (அணிந்த) நளன்றன்—நள அரசனது,

என்ற பொருளும்

இல்—போல 5 வேற்றுமை உருபு, ஒப்புப்பொருள்

(‘ஐந்தாவதனுருபு இல்லும் இன்னும், நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே’) (நன்னூல்)

என்ற இலக்கண அமைதியும் பொருந்துமா, சிந்திக்க.

———